நெல்லை மாவட்டம் - ரெட்டியார்பட்டி மலைப்பகுதியில்

# ரூ. 33.02 கோடி மதிப்பீட்டில் 'பொருநை அருங்காட்சியகம்' அமைக்கும் பணிகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்தனர்!

நெல்லை.செப்.6.

நெல்லை மாவட்டம் ரெட்டியார்பட்டி மலைப்பகுதியில் ரூபாய் 33.02 கோடி மதிப்பீட்டில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைகள்சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு,நெடுஞ்சாலைத் துறை அரசு செயலாளர் செல்வராஜ், பொதுப்பணித் துறை அரசு செயலாளர் மங்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வகாப்(பாளை)ஈ.ராஜா (சங்கரன்கோவில்) நெல்லை மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜு ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்ததாவது. தமிழகத்தின் தொன்மையான வரலாற்றினை உலகறிய செய்யும் பொருட்டு கொற்கை, ஆதிச்சநல்லூர்,சிவகளை ஆகிய இடங்களில் கிடைத்த தொல் பொருட்களை காட்சிப்படுத்து வதற்காக திருநெல்வேலி மாவட்டம்குலவணிகர்கிராமத்தில் ரூ.33.02 கோடி மதிப்பீட்டுச்செலவில் அருங்காட்சியகம் அமைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்; உத்தரவிட்டு (18.05.2023 அன்று)அடிக்கல் நாட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த அருங்காட்சியகத்தில் நிர்வாக தொகுதி தரைதளம் 5566 சதுர அடியிலும்,முதல்தளம் 5393 சதுர அடியிலும், சிவகளை கட்டடத் தொகுதி தரைதளம் 6068 சதுர அடியிலும்,முதல் தளம் 2923 சதுர அடியிலும், ஆதிச்சநல்லூர் கட்டடத் முதல் தொகுதி தரைதளம் 5097 சதுர அடியிலும், முதல் தளம் 4271 சதுர அடியிலும், ஆதிச்சநல்லூர் கட்டட இரண்டாம் தொகுதி தரை தளம் 3509 சதுர அடியிலும்,

முதல் தளம் 3509 சதுர அடியிலும், கொற்கை கட்டட முதல் தொகுதி தரைதளம் 7624 சதுர அடியிலும், முதல்தளம் 5238 சதுர அடி, கொற்கை கட்ட இரண்டாம் தொகுதி தரைதளம் 2420 சதுர அடியிலும், முதல் தளம் 2147 சதுர அடியிலும், கைவினை பொருட்கள் பணிமனை தரைதளம் மட்டும் 430 சதுர அடியிலும் என மொத்தம் 54,296 சதுர அடி பரப்பளவில் பொருநை அருங்காட்சியகம் அமைத்து காட்சிப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த அருங்காட்சியகத்தில் தற்போது பணியானது கட்டடங்களின் உட்புற பூச்சுப்பணி, கதவு,சன்னல் பொருத்துதல், முகப்பு அலங்கார பணி நடைபெற்று வருகிறது. முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் அருங்காட்சியத்திற்கு வந்து ஒவ்வொரு அரங்கத்தை பார்ப்பதற்கு வசதியாக பேட்டரி கொண்ட வாகனம் வருவதற்கான தரைத்தளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று

வருகிறது.அருங்காட்சியகம் பணிகள் எதிர்பார்த்ததைவிட வேகமாக நடைபெற்று கொண்டிருக்கிறது. அருங்காட்சியக கட்டிட அரங்கம் ஒவ்வொரு அரங்கமும் தரமாக கட்டப்பட்டு வருகிறது. அருங்காட்சியக கட்டடப்பணிகள் அனைத்தும் விரைவாக கட்டப்பட்டு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் பொதுப்பணித் துறையின் மூலம் பல்வேறு கட்டடங்கள் சிறப்பாக கட்டப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் புதிதாக சுற்று வட்ட புறவழிச் சாலை அமைக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கான பணிகள் 3 கட்டங்களாக பிரிக்கப்பட்டு விரைவாக பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. முதற்கட்ட பணிகளுக்காக 90 சதவீதம் நிலம் எடுக்கப்பட்டுள்ளது விரைவில் ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளது. மீதமுள்ள 2 கட்டப்பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன், ஆ.பிரபாகரன், மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்,

ஒன்றிய செயலாளர் அருள்மணி, தகவல் தொழில்நுட்ப பணி காசி மணி,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், மாமன்ற உறுப்பினர்கள் மன்சூர், மாரியப்பன்,சுப்பிரமணியன், களக்காடு நகர்மன்ற துணை தலைவர் ஒன்றிய செயலாளர் ராஜன்

உள்பட அரசு அலுவலர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்ட மன்ற தொகுதி கழுதூர் ஊராட்சி பெரியார் நினைவு சமத்துவபுரம் பகுதியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் புதிய கால் நடை நிலையத்தை தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் திறந்து வைத்தார்.

காட்பாடி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகக் குழு உறுப்பினர்

# கே.குப்புசாமி இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி!

## அமைச்சர் துரைமுருகன் பங்கேற்கிறார்!

வேலூர், செப். 6 -



வேலூர் மாவட்டம் காட்பாடி சேனூர் ஊராட்சி கழக முன்னாள் செயலாளரும் மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாக குழு உறுப்பினருமான கே.குப்புசாமி - குணா ஆகியோரின் மகன் கே.கருணாநிதி பெங்களூரு ராமமூர்த்தி - செல்வி ஆகியோரின் மகள் சவுமியா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி வருகிற 8ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு காட்பாடி கரசமங்கலம் துளசி திருமண மண்டபத்தில் வரவேற்பு நிகழ்ச்சி நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. இதில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, அரக்கோணம் நாடாளு மன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர்ஜி.விசுவநாதன், வேலூர்மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், கழக புரவலர் துரை சிங்காரம், மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை தலைவர் நா.அசோகன், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

திருமண வரவேற்பு நிகழ்ச்சி ஏற்பாடுகளை மணமகனின் பெற்றோர் செய்துள்ளனர்.

# 8 சென்னை பள்ளிகளுக்கு 1650 மேஜைகள் - இருக்கைகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, செப். 6 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , அடையாறு மண்டலத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சென்னை தொடக்கப்பள்ளிக் கட்டடம் மற்றும் பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் சார்பில் 8 சென்னை பள்ளிகளுக்கு 1,650 வண்ண மேசை மற்றும் இருக்கைகளை வழங்கினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு172, மடுவின்கரை, ஐந்து ஃபர்லாங் சாலை சென்னை பள்ளி வளாகத்தில் நமக்கு நாமே திட்டத்தின் (202223) கீழ்,

ரூ.3.64 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள சென்னை தொடக்கப்பள்ளிக்கான கூடுதல் பள்ளிக் கட்டடத்தினை நேற்று (05.09.2024) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்தப் பள்ளிக் கட்டடமானது 1171.27 ச.மீ. பரப்பளவில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் 12 வகுப்பறைகள், 2 ஆசிரியர் அறைகள் மற்றும் 4 கழிப்பறைகள் உள்ளன.

இதனைத் தொடர்ந்து, மடுவின்கரை சென்னை மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் லார்சன் அன்ட் டூப்ரோ (Larsen & Toubro) லிமிடெட் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பங்களிப்பு நிதியில் ரூ.1.50 கோடி மதிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சியின் 8 சென்னை பள்ளிகளுக்கு 1,650 வண்ண மேசைகள் மற்றும் இருக்கைகளை வழங்கினார்.

இந்த வண்ண மேசை மற்றும் இருக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் கோயம்பேடு சென்னை உயர்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை சென்னை ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள், விருகம்பாக்கம், மடுவின்கரை, வேளச்சேரி, தரமணி மற்றும் திருவான்மியூர் சென்னை மேல்நிலைப்பள்ளிகள் என 8 சென்னை பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பின்னர், வார்டு178, தரமணி, கானகம், நேதாஜி தெருவில் 178வது வார்டு மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.30 இலட்சம் மதிப்பில் 116.80 ச.மீ. பரப்பளவில் கட்டப்பட்ட பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இதனால் 1145 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி. அமித், மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் தா.மோகன்குமார், எஸ். பாஸ்கரன், வே.ஆனந்தம், பூமி நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி வைஷ்ணவி சீனிவாசன், ஒராக்கிள் நிறுவனத்தின் மூத்த ஆலோசனை தீர்வு இயக்குநர் பாலாஜி ரங்காச்சாரி, லார்சன் அன்ட் டூப்ரோ (Larsen & Toubro) லிமிடெட் நிறுவனத்தின் துணை பொது மேலாளர் (CSR) ஆர்.ராஜசேகர பாண்டி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இராமேஸ்வரம் மற்றும் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்காமல்

# பாராமுகம் காட்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குக் கண்டனம்!

## இராமேஸ்வரம் நகரக் கழகக் கூட்டத்தில் தீர்மானம் ! நாசர்கான் சிறப்புரை!

இராமேஸ்வரம்,செப்.6-

இராமேஸ்வரம் நகர் கழகத்தின் பொது உறுப்பினர்கள், செயல்வீரர் கூட்டம் 3.9.2024 அன்று செவ்வாய்க்கிழமை மலை 3 மணி அளவில் கிருஷ்ணா கார்டன் திருமண மண்டபத்தில் நகர் அவைத் தலைவர் எம்.எம். கருப்பையா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகரச் செயலாளர் நாசர்கான் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில்கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

அத்தீர்மானங்கள் வருமாறு:-

நமது முத்தமிழ் அறிஞர், தானை தலைவர், செம்மொழி நாயகர், தலைவர் கலைஞர் அவர்கள் இந்த தமிழ் சமுதாயத்திற்காக வாழ்நாள் முழுவதும் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்து, சமூக நீதி கண்டவரும், சாதி, சமய வேறுபாடுகளை களைந்து சமத்துவம், சகோதரத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்கி வாழ்ந்து, தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்று தந்து ஓய்விற்கே ஓய்வு தந்து உழைத்த நமது தலைவர் கலைஞர் அவர்களும் ஒன்றிய அரசு, அவருக்கு மரியாதை செய்து நாணயம் வெளியீடு செய்து, அதனை விழாவாக நடத்தி கௌரவப்படுத்திய ஒன்றிய அரசை பாராட்டுகிறது.

வருகின்ற செப்டம்பர், 11.9.2024-ந் தேதி தியாகி இமான்வேல் சேகரன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு வருகை தரும், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம், நமது கழக எதிர்காலம் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்டம் எல்லையில் நமது இராமேஸ்வரம் நகர் கழகம் சார்பில் திரளாக கலந்து கொண்டு வரவேற்க வேண்டும்.

2ஆம் கட்டமாக புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, இராமேஸ்வரம் நகர் கழகம் சார்பில் பெறப்பட்ட அனைத்து கழக உறுப்பினர் உரிமை சீட்டை உடனடியாக உரியவர்களிடம் அந்தந்த வார்டு கழக செயலாளர்கள் சேர்த்திட வேண்டும், புதியவர்களை நமது கழக உறுப்பினராக சேர்க்கும் பணியில் ஈடுபட வேண்டும். அதற்கு உண்டான படிவங்களை நகர் கழகத்திடம் பெற்றுக் கொண்டு அந்த பணிகளை மேற்கொள்ள அந்தந்த வார்டு செயலாளர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வருகின்ற 2026-ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலில், நமது கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்கள் கூறிய 200 தொகுதி நமது குறிக்கோள் என்ற வார்த்தைகளுக்கு ஏற்ப கடுமையாக உழைத்து மீண்டும் கழக ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் எனவும், அந்த இலக்கை அடையும் வரை களத்தில் உழைத்து வெற்றியை பெற நாம் அனைவரும் உறுதியேற்போம் எனவும், அதற்கான பணிகளை மேற்கொள்ள தலைமை கழகத்தால் வழங்கப்பட்ட ஓ.எம்.ஆர் படிவங்களை பூர்த்தி செய்து, மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும் என வார்டு கழக செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நமது இராமேசுவரம் மீனவர்கள், தொடர்ந்து இலங்கை கடற்படையால் தாக்கப்பட்டு, படகுகள் மூழ்கடிக்கப்பட்டு அராஜகங்கள் செய்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பாக இலங்கை கடற்படை நமது மீனவர்களின் படகை மோதி மூழ்கடிக்கப்பட்டபோது இரண்டு மீனவர்கள் உயிர் இழந்தனர், அவர்களின் குடும்ப சூழ்நிலையை கருத்தி, தமிழ்நாடு முதல் அமைச்சர் தளபதியார் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 10,00,000 முதல் அமைச்சர் நிவாரண நிதியில் இருந்து வழங்கினார்கள். அதற்கும, மனதார பாராட்டுதலை வழங்குகிறது.

மேலும் இலங்கையில் பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்த விசைப்படகுகளுக்கு தலா ரூ.5,00,000மும், நாட்டு படகுகளுக்கும் தலா ரூ. 3,00,000மும் வழங்கி மீனவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களுக்கு இந்தக் கூட்டம் மனதார நன்றி தெரிவிக்கிறது.

நமது இராமேஸ்வரம் மீனவர்கள் மற்றும் தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையால் தாக்கப்பட்டு, படகுகளை பறிமுதல் செய்தும், மீனவர்களை பிடித்து சிறையில் அடைத்து வருகிறார்கள். இதனை கண்டிக்கின்ற வகையில், தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்கள் ஒன்றிய அரசை கேட்டுக் கொண்டு, கடிதம் எழுதியும், அதனை கண்டு கொள்ளாமல், பாராமுகம் காட்டும் ஒன்றிய அரசை, இராமேஸ்வரம் நகர் கழகம் வன்மையாக கண்டிக்கிறது. இனியும், தாமதிக்காமல் இலங்கை அரசு, ஒன்றிய அரசு எச்சரிக்கை செய்து, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என இந்தக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

கல்லாக்கோட்டை அரசுப் பள்ளியில் பயின்று

# 7.5% இடஒதுக்கீடு மூலம் மருத்துவம் பயில இடம் பெற்ற மாணவிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பாராட்டி நிதி உதவி!

புதுக்கோட்டை, செப். 6 -

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளவிடுதி, மங்களா கோவில் சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்"" திட்ட முகாமில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 30.8.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார்.

அமைச்சர் தெரிவித்ததாவது; -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை பதிவு செய்திடும் வகையில், "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "மக்களுடன் முதல்வர்"" திட்டத்தை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்திடும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 11.07.2024 முதல் 10.09.2024 வரை 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 495 கிராம ஊராட்சிகளில் 66 "மக்களுடன் முதல்வர்"" திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளாள விடுதி,

மங்களாகோவில் சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்"" திட்ட முகாம் பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்கள் கேட்டறியப்பட்டது. எனவே பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது தொடர்புடைய அரசு அலுவலர்கள் உரிய பரிசீலனை செய்து தீர்வு காண வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

பின்னர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், சுந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், அண்டனூர் ஊராட்சி, மஞ்சம்பட்டி முத்துமாரியம்மன் கோவில் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்கினையும், வெள்ளாள விடுதி ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலைய பயணியர் நிழற்குடை யினையும், ஆதி திராவிடர் தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினையும், திருக்கட்டளை ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றியினையும் திறந்து வைத்தார். மேலும், கல்லாக்கோட்டை ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் பசுமை பள்ளி பணியினை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்து, பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதி கல்லாக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று 7.5% இடஒதுக்கீடு மூலம் மருத்துவம் பயில இடம் பெற்ற மாணவிகள் டி. யுவதிகா அரசு மருத்துவக் கல்லூரி நீலகிரி, எம். ராகவி, ஆர்.வி.எஸ். பல் மருத்துவக் கல்லூரி கோவை,

எம். அபிநயா அரசு மருத்துவக் கல்லூரி புதுக்கோட்டை, ஆர். பவித்ரா மாதா பல் மருத்துவக் கல்லூரி குன்றத்தூர் உள்ளிட்ட ஏழு மாணவிகளையும் பாராட்டி, வரும் காலங்களில் சிறப்பாக மருத்துவக் கல்வியில் தேர்ச்சி அடைந்து பொதுமக்களுக்கு சேவையாற்றிட வாழ்த்துகள் தெரிவித்து நிதி உதவி வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வுகளில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், கந்தர்வக்கோட்டை ஒன்றியக்குழுத் தலைவர் கார்த்திக் (எ) இரா.ரெத்தினவேல், மங்களா புரம் ஊராட்சிமன்றத் தலைவர் எம்.பரமசிவம், நியூஸ் ராஜேந்திரன், எம். ஆர்.கே.முருகேசன், எஸ். ஆர்.கலையரசன், குஞ்சப்பா, உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.





திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகர தி.மு.க சார்பில் நேற்று காலை 10.00 மணியளவில் திருப்பத்தூர் SRK கன்வென்சன் ஹாலில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தி, புதிய உறுப்பினர்கள் அட்டை மற்றும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர், தென்திசையின் தீர்ப்பு 40/40 நூல்களை வழங்கினார். திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்து, கூட்டத்திற்கு தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர். ஜோதிராஜன், பொதுக்குழு உறுப்பினர் சு.அரசு, டி.ரகுநாத், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் செ.வெங்கடேசன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சார்லஸ் நவீன்குமார், திருப்பத்தூர் நகர மன்ற தலைவர் சங்கீதாவெங்கடேசன், மற்றும் நகர கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.